# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 07.06.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 46, 47 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ۚ وَإِنَّهَا لَكَبِيرَةٌ إِلَّا عَلَى الْخٰشِعِينَ

الَّذِينَ يَظُنُّونَ أَنَّهُمْ مُّلٰقُوا رَبِّهِمْ وَأَنَّهُمْ إِلَيْهِ رٰجِعُونَ

*பொருள்: பொறுமை, தொழுகை ஆகியவை மூலம் உதவி கேளுங்கள். நிச்சயமாக பணிவுடையவர்களைத் தவிர மற்ற அனைவரின் மீதும் இது கடினமான ஒன்றாகும்.*

*அவர்கள் தங்களுடைய இறைவனை சந்திக்கக் கூடியவர்களென்றும் நாங்கள் அவனிடமே திரும்பச் செல்லக் கூடியவர்களென்றும் உறுதியாக அறிவார்கள். (2:46,47)*

இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்காக இந்த வசனத்தில் அல்லாஹ் ஒரு அடிப்படையான கருத்தின் பக்கம் கவனமூட்டுகின்றான். இதைப் பற்றி திருக்குர்ஆனில் வேறு இடங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. அது பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தை மேற்கொள்வதாகும். அதாவது திருக்குர்ஆனிலுள்ள கட்டளைகள், ஏவல்கள், விலக்கல்கள் ஆகியவற்றிற்கேற்ப செயல்படுவது இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கு அவசியமானதாகும். அவற்றின் அடித்தளம் தாழ்மைக் குணம் மற்றும் பணிவை மேற்கொள்வதில் இருக்கின்றது அல்லது இவ்வாறும் கூறலாம். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுவது ஒருவரை பணிவு, தாழ்மைக் குணம் ஆகியவற்றின் பக்கம் கொண்டு செல்கின்றது. ஓர் உண்மையான நம்பிக்கையாளர் இந்த கட்டளைகளுக்கேற்ப செயல்படுகின்றார் என்றால் நிச்சயமாக அவரிடம் பணிவும் தாழ்மைக் குணமும் உருவாகி விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் وَيَزِيدُهُمْ خُشُوعًا *(குர்ஆனாகிய) அது அவர்களது பணிவை (மேலும்) அதிகரிக்கின்றது (17:110)* என்பதற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவனின் வசனங்கள் அவர்களிடம் தாழ்மைக் குணத்தையும் அதிகரிக்கும்படி செய்கின்றது. நான் இறைவனின் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்கின்றேன். அவற்றை படிக்கின்றேன். அதற்கேற்ப செயல்படுகின்றேன் என்று ஒரு நம்பிக்கையாளர் வாதம் செய்கின்ற போது, அவரிடம் பணிவும், தாழ்மைக் குணமும் இல்லாத வரை கண்டிப்பாக அவரால் திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப தமது இறை வணக்கங்களையும், மற்ற செயல்களையும் செய்ய முடியாது. அல்லது அவரது பணிவும், தாழ்மைக் குணமும்தான் அவரை இந்த இறை வணக்கங்கள், நற்செயல்கள் ஆகியவற்றின் உயர்வான தரம் வரை கொண்டு செல்கின்றது.

நபிமார்கள் இந்த நோக்கத்தை பிரச்சாரம் செய்வதற்காகவும், இதைப் பரப்புவதற்காகவும், இதை மக்களின் மனங்களில் பதிவு செய்வதற்காகவும், தமது நிலைமைகள் மூலம் இதனை வெளிப்படுத்துவதற்–காகவும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டனர். இதற்கான மிக உயர்ந்த நல்லுதாரணம் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியில் கிடைக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹுத்தஆலா மிகவும் கருணை மிக்கவனும், பரிவு காட்டுபவனுமாவான். அவன் எல்லா விதத்திலும் மனிதனை வளர்ச்சியடையச் செய்கின்றான். மேலும் அவன் மீது கருணை காட்டுகின்றான். இந்த கருணையின் காரணமாகவே அவன் தன்னால் நியமிக்கப்பட்டவர்களையும், தனது தூதர்களையும் அனுப்புகின்றான். அதன் மூலம் அவர்கள் உலகில் உள்ளவர்களுக்கு பாவங்கள் படிந்துள்ள வாழ்விலிருந்தும் இரட்சிப்பை வழங்குகின்றனர். ஆனால் கர்வம் மிகவும் அபாயகரமான நோயாகும். கர்வம் உருவாகி விடும் ஒரு மனிதருக்கு ஆன்மீக மரணம் ஏற்பட்டு விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இந்த நோய் கொலையை விட பெரியது என்பதை நான் உறுதியாக அறிந்திருக்கின்றேன். அகங்காரத்துடன் நடந்து கொள்பவர் சய்த்தானின் சகோதரர் ஆவார். ஏனென்றால் அகங்காரத்துடன் நடந்து கொண்டதால்தான் சய்த்தானை இழிவிற்கு ஆளாக்கியது. எனவே கர்வம் இருக்கக் கூடாது என்பது நம்பிக்கையாளருக்குரிய நிபந்தனையாகும். மாறாக பணிவு, தன்னடக்கம், தாழ்மைக்குணம் ஆகியவை அவரிடம் இருக்க வேண்டும். இது இறைவனால் நியமிக்கப்பட்டவரது சிறப்பம்சமாகும்.” அதாவது எல்லாரையும் விட அதிகமாக இறை தூதர்களிடம் இந்த குணங்கள் இருக்கும். அவர்களிடம் அளவு கடந்த பணிவு இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அவர்களிடம் மிகவும் அதிகமாக பணிவும், தாழ்மைக் குணமும் இருக்கும். எல்லாரையும் விட அதிகமாக இந்த பண்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது. அன்னாரது ஊழியர் ஒருவரிடம், அன்னார் உங்களிடம் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அந்த ஊழியர் உண்மை என்னவென்றால், நான் அவர்களுக்கு தொண்டு செய்வதை விட அதிகமாக அவர்கள்தான் எனக்கு தொண்டு செய்கின்றார்கள் என்று கூறினார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் வ பாரிக் வஸல்லிம்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதுவே பணிவு மற்றும் உயர்வான நல்லொழுக்கத்தின் முன்மாதிரியாகும். அதிக நேரம் நம்முடன் இருப்பவர்கள் நமக்கு அருகில் இருக்கின்ற ஊழியர்கள் தான் என்பது உண்மையானதாகும். எனவே ஒருவரது பணிவு, தாழ்மைக் குணம், சகிப்புத்தன்மை, கனிவுடன் நடந்து கொள்ளும் தன்மை ஆகியவற்றைப் பார்க்க வேண்டும் என்றால் அன்னாரிடமிருந்துதான் அதை தெரிந்து கொள்ள முடியும்.

இதுதான் அந்த முழுமை பெற்ற மனிதரின் முன்மாதிரியாகும். அதை பின்பற்ற வேண்டும் என்றே இந்த உம்மத்திற்கு போதிக்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் அதன் கட்டளைகளுக்கேற்ப செயல்படும்படி நம்மிடம் கூறும்போது அதற்கான முழுமையான முன்மாதிரியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம் முன்னால் நிற்கின்றார்கள். அவர்களது இறை வணக்கங்களும் மிகவும் உயர்வான தரத்தை அடைந்திருந்தது. அது தொடர்பாக இறைவன் அவர்களிடம் நீர் அறிவிப்பு செய்வீராக! எனக்கென்று எதுவுமில்லை. எனது இறை வணக்கங்கள் முழுக்க முழுக்க இறைவனுக்காக மட்டுமே இருக்கின்றது. நான் எனக்காக எதையும் பெறமாட்டேன். எதையும் பெற விரும்பமாட்டேன். மாறாக இறை திருப்தி கிடைப்பதே எனது நோக்கமாகும். எனது வாழ்வின் நோக்கம் இறைவனுடனேயே இருந்து வருகிறது. அவனையே சுற்றி வருகிறது.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

*நீர் (அவர்களிடம்) கூறுவீராக! என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. (6:163)*

என்ற இறை அறிவிப்பு எத்தகைய அறிவிப்பாக இருக்கின்றது என்றால் அதன் உயர்வான தரம் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு யாரும் சென்றடைய முடியாது.

பொறுமையைப் பற்றி கூறுவதாயிருந்தால்,

وَمَا يُلَقَّاهَا إِلَّا الَّذِينَ صَبَرُوا وَمَا يُلَقَّاهَا إِلَّا ذُو حَظٍّ عَظِيمٍ *அதற்கான வாய்ப்பு பொறுமையை நன்கு கடைபிடிப்பவர்களுக்கே கிடைக்கின்றது. மேலும் நன்மையின் ஒரு மாபெரும் பகுதியினைப் பெற்றவர்களுக்கே அது கிடைக்கும். (41:36)*

என்ற அல்லாஹ்வின் கூற்றிற்கேற்ப கொடுமைகளைச் சகித்த பிறகும் இந்த உயர் தகுதியானது மிகவும் அதிகமாக பொறுமையை மேற்கொள்பவர்களுக்கே கிடைக்கின்றது. அல்லது இறைவன் புறமிருந்து நன்மையின் மாபெரும் பகுதியனைப் பெற்றவர்களுக்கே அது கிடைக்கின்றது. நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையைப் பற்றி படிக்கும் போது குடும்ப ரீதியாக அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் துயரங்களின் சமயத்திலும், உடல் ரீதியாக அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் துயரங்களின் சமயத்திலும், அவ்வாறே அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு துன்பங்களும், துயரங்களும் வந்த சமயத்திலும் பொறுமையின்

உயர்வான நல்லுதாரணத்தையும் பொறுமையின் உயர்வான தரத்தையும் நம்மால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மட்டுமே பார்க்க முடிகின்றது. அவர்களுக்கு மட்டும் ஏற்பட்ட துன்பங்களைப் பாருங்கள்.

தாயிஃப் நகரத்தில் அவர்கள் எத்தகு உயர்வான பொறுமையை கடைபிடித்தார்கள்! இவ்வாறு பொறுமையை கடைபிடித்ததன் மூலம் ஒரு நகரம் அழிந்து போவதை அவர்கள் தடுத்து அதை காப்பாற்றி விட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான உரிமையை வழங்கியிருந்தும் கூட அவர்கள் காயமடைந்து அந்த நகரவாசிகளின் கொடுமைகளுக்கு ஆளாகிய பிறகும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம், இல்லை! இல்லை!! நீ இந்த நகரத்தை அழித்து விடக் கூடாது என்றே வேண்டினார்கள். பிறகு அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் சமுதாயம் அவர்கள் மீது இழைத்த கொடுமைகளை தாங்க முடியாமல் குறிப்பிட்ட சில மக்களுக்கு எதிராக அல்லது குறிப்பிட்ட சமுதாயத்திற்கு எதிராக சாபமிடும்படி வேண்டிய சமயத்தில் அவர்கள், அவர்களது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு நான் அவர்களுக்கு எதிராக சாபமிடுவேன் என்று கூறவில்லை. மாறாக அந்த சமுதாயத்திற்கு நேர்வழி கிடைக்க வேண்டும் என்றே அவர்கள் துஆ செய்தார்கள். இவ்வாறு தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடமும் தனது முன்மாதிரி, தனது செயல், தனது துஆ ஆகியவற்றின் மூலமாக பொறுமையை கடைபிடிக்கும்படி அவர்கள் போதனை செய்தார்கள். சரியான பழிவாங்குதல் என்பது சாபமிடுவதால் ஏற்படாது. மாறாக அவர்களுக்கு நேர்வழி கிடைக்க துஆ செய்வதன் மூலமாகவே சரியான பழிவாங்குதல் இருக்க முடியும். பொறுமையை கடைபிடிப்பதன் உயர்வான முன்மாதிரியைக் காட்டுவதன் மூலமாகவே சரியான முறையில் அவர்களை பழிவாங்க முடியும் என்பதை அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

பணிவு மற்றும் தாழ்மைக் குணம் ஆகியவற்றிற்கான நல்லுதாரணத்தைப் பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எல்லா இடத்திலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த பண்புகளை நாம் பார்க்க முடியும். இதற்கான ஓர் உதாரணத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோளிலிருந்து நான் உங்களுக்கு கூறினேன். இறை நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு முழுமையான முன்மாதிரி நமக்கு கிடைத்திருக்கின்றது. இந்த முன்மாதிரியைப் பின்பற்றுமாறு இறைவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். இன்றும் பல்வேறு கட்டளைகளை அவன் நமக்கு வழங்கி அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் எனது நெருக்கம் உங்களுக்கு கிடைக்கும் என்று கூறியுள்ளான். ஆனால் இந்த கட்டளைகளுடனும் இந்த முன்மாதிரியுடனும் அடிப்படையான ஒரு விசயத்தையும் அல்லாஹ் நமக்கு சுட்டிக் காட்டியுள்ளான். அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கும் இந்த முன்மாதிரிக்கேற்ப செயல்படுவதும் நீங்கள் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் மேற்கொண்டு நடப்பதன் மூலமாகவே சாத்தியமாகும். பணிவையும் தாழ்மைக் குணத்தையும் மேற்கொண்டு நடப்பவர்களுக்கே இந்த உயர் தகுதி கிடைக்கும். தனது திகில் நிறைந்த தோற்றத்தின் தாக்கத்திற்கு ஆளாகி நடுங்கிய பலவீனமான மனிதரைப் பார்த்து பயப்பட வேண்டாம். நானும் உங்களைப் போன்ற மனிதன் ஆவேன். நானும் ஒரு பெண்ணிடமிருந்தே பால் குடித்துள்ளேன். அந்த பெண்ணோ மிக சாதாரணமான உணவையே உண்டு வந்தாள். சாதாரண மக்களைப் போன்றே தமது வாழ்வைக் கழித்து வந்தாள் என்று கூறிய பெருமானார் (ஸல்) அவர்களின் உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றுவதன் மூலமே இது சாத்தியமாகும். பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடமும் அல்லாஹ் நீங்களும் பணிவைக் கடைபிடிக்கின்ற மனிதர்களாக ஆகுங்கள். அதன் மூலம் இறைவனின் நெருக்கம் உங்களுக்கு கிடைக்கும் என்று கூறுகின்றான். நான் ஓதிய இந்த வசனங்களில் பணிவை மேற்கொண்டவாறு இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்களை நீங்கள் ஒன்றுமற்ற பொருளாகக் கருதியவாறு பணிவின் மிக உயர்ந்த தரத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யாத வரை இறை நெருக்கத்தை உங்களால் பெற முடியாது. பணிவுடன் அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்காக முயற்சி செய்யாத வரை அல்லாஹ் கூறியுள்ள வழிகளில் உங்களால் செல்ல முடியாது. மேலும் அவனது கட்டளைகளுக்கேற்ப உங்களால் செயல்படவும் முடியாது. எனவே தான் அவனது அருளைப் பெறுவதற்கு பணிவுடன் அவனிடம் உதவி கேட்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் பல்வேறு சமுதாயங்களின் உதாரணத்தையும் நமக்கு எடுத்துக் கூறியுள்ளான். சில சமயங்களில் நேரடியாக இதைப் பற்றிய கட்டளைகளை அவன் நமக்கு வழங்குகின்றான். சில சமயங்களில் முன் சென்று போன பழைய சமுதாயங்களின் நிலைமைகளை அவன் நமக்கு எடுத்துக் கூறுகின்றான். சில மக்களின் நிலைமைகளை எடுத்து கூறியவாறு அவர்கள் இப்படி நடந்து கொண்டனர். அத்தகைய நடைமுறையை அவர்கள் மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் அவர்களிடம் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கும் என்று கூறுகின்றான். அவற்றில்

நம்பிக்கையாளர்களுக்கும் பாடம் இருக்கின்றது. அதாவது உங்களுக்கு நேரடியாக இடப்பட்ட கட்டளை மட்டும் உங்களுக்கு வழங்கப்பட்ட போதனையல்ல. மாறாக இது தொடர்பாக திருக்குர்ஆனில் கூறப்பட்ட ஒவ்வொரு விசயமும் உங்களுக்கு போதனையாக இருக்கின்றது.

இங்கும் அல்லாஹ் இதைத்தான் கூறுகின்றான். நீங்கள் பணிவை மேற்கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அவனது அருளைப் பெறுவதற்காக அவனது உதவியை பணிவுடன் வேண்டுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். எதுவரை வஸ்தயீனு – உதவி கோருங்கள் என்பதன் ஆன்மாவை நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்களோ அதுவரை நன்மையின் வழிகளை நீங்கள் நிர்ணயிக்க முடியாது. எப்போது மிகுந்த பணிவும் உருக்கமும் உங்களிடம் ஏற்படுமோ அப்போது தான் வஸ்தயீனு – நீங்கள் உதவி கோருங்கள் என்பதன் ஆன்மா உருவாக முடியும். தாழ்மைக் குணம் உருவாகாத வரை, என்னிடம் இருக்கின்ற எனது எந்தவொரு சிறப்பும் எந்தவொரு அருட்கொடைக்கும் உரிமை உடையவனாக என்னை ஆக்க முடியாது என்ற உணர்வு ஏற்படாத வரை, அல்லாஹ்வின் அருள் என் மீது இருந்தால் மட்டும் தான் எனது இம்மையும் மறுமையும் சரியாகும் என்ற உணர்வு ஏற்படாத வரை இத்தகைய ஆன்மாவை நீங்கள் பெற முடியாது. எனவே இறைவனிடம் இந்த உதவியை மிகுந்த பணிவுடன் கேட்க வேண்டும்.

அதாவது இறைவா! உனது கருணையாலும் அருளாலும் நீ எங்களுக்கு உதவி செயவதற்காக வருவாயாக! நீ திருப்தி அடையும் வகையிலுள்ள அந்த வழிமுறைகளை நீ எங்களுக்கு கற்றுத் தருவாயாக! இறை வணக்கம் மற்றும் பொறுமை தொடர்பாகவும் உனக்கு விருப்பமான வழிமுறைகளை நீ எங்களுக்கு கற்றுத் தருவாயாக என்று அவனிடம் கேட்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த அருள்களைப் பெறுவதற்காக நீ என்னிடம் உதவி கேட்கின்றாய். பிறகு அதற்கான பணிவை வெளிப்படுத்திக் காட்டியவாறு பொறுமையை மேற்கொள்வதன் தரத்தையும் உயர்த்துங்கள். அகராதிப் பொருள் கூறுபவர்களின் பார்வையில் ஸபர் என்பதற்கு எவ்வித கூச்சலுமின்றி மிகுதியாக நல்லொழுக்கத்தைப் பேணியவாறு துன்பங்களைச் சகித்துக் கொள்வது, எவ்வித முறையிடுகின்ற சொற்களையும் நாவில் கொண்டு வராமல் இருப்பது ஆகியவை இதற்கு பொருளாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

சிலரது பார்வையில் துன்பங்கள், துயரங்கள் நிறைந்த நிலைமை மற்றும் இன்பமும் சுகமும் நிறைந்த நிலைமை ஆகியவற்றிற்கிடையில் எவ்வித வித்தியாசத்தையும் உணராமல் இருப்பதற்கே ஸபர் என்று கூறப்படுகின்றது. அதாவது எல்லா நிலையிலும் இறை திருப்தியில் திருப்தி அடைய வேண்டும். இறைவா! எதில் உனது திருப்தி உள்ளதோ அதிலேயே நாங்களும் திருப்தி அடைகின்றோம் என்ற நிலை ஏற்பட வேண்டும். அதாவது முழுமையான, போதுமென்ற மனதுடன் இறைவனின் திருப்தியில் திருப்தி அடைய வேண்டும். எல்லா நிலையிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளுதல், தனது வலுவான ஈமான் ஆகியவற்றை இறைவனுக்காக நிலைநாட்ட வேண்டும். முழுக்க முழுக்க இறைவனுடன் மட்டுமே ஒன்றியிருக்க வேண்டும். மேலும் அவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அல்லாஹுத்தஆலா கூறியுள்ள போதனைகளை செயல்படுத்துவதில் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும். இத்தகைய பொறுமையின் நிலைமை பற்றியே அல்லாஹுத்தஆலா நீங்கள் இதில் நிலைத்திருந்தால் எனது அருள்களைப் பெறுபவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள் என்று கூறுகின்றான். மேலும் இப்படிப்பட்ட பொறுமையின் நிலைமையில் நீங்கள் செய்கின்ற துஆக்கள் உங்களை எனது அருள்களுக்கு வாரிசாக்கி விடும் என்று அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் கலப்பற்ற தனது தூய அடியார்களை அவர்கள் வீணாகும் வகையில் கைவிட்டு விடமாட்டான். அல்லாஹ்வையே ஒருவர் முழுமையாக சார்ந்திருக்கும் போது அவன் அத்தகைய பொறுமைக்கான நற்கூலியை கண்டிப்பாக வழங்குகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: அத்தகைய பொறுமையும் உறுதியாக நிலைநிற்கும் தன்மையும் ஏற்பட்டு விட்டால் பிறகு உங்களது துஆக்களை அல்லாஹ் கேட்கின்றான். பொறுமையை கடைபிடித்தவாறு அமர்ந்து விடக்கூடாது. மாறாக தொழுகைக்கான உரிமையையும் செலுத்த வேண்டும். ஸலாத் என்றால் என்ன? தொழுகையையும் அது குறிக்கும். மனிதன் போகும்போதும் வரும்போதும் செய்யும் துஆக்களையும் அது குறிக்கும். இறைவனுக்கு முன்பாக குனிவதையும் அது குறிக்கும். பணிவாக அவனிடம் வேண்டுவதையும் அது குறிக்கும். பணிவாக இறைவனிடம் அவனது அருளை கேட்பதையம் இது குறிக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்: முழுமையாக பணிவின் வழிகளில் நடப்பவருக்கு தான் இத்தகைய ஸலாத்திற்குரிய உரிமையைச் செலுத்த முடியும். அவரிடம் தற்பெருமையின் சிறு அடையாளம் கூட இருக்காது.

அவரிடம் ‘தான்’ என்ற அகந்தை மற்றும் தன்னை பெரியதாகக் காட்டிக் கொள்கின்ற எந்தவொரு அம்சமும் இருக்காது. எந்த ஸலாத்தில் இவ்விசயங்கள் இல்லையோ அவரது ஸலாத், ஸலாத் அல்ல. அப்படிப்பட்ட நபர் தொழுதாலும் இறைவன் அவரை பொருட்படுத்தமாட்டான். பணிவில் முன்னேறியவாறு இறைவனுடன் ஒருபோதும் அறுந்து விடாத தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட நிலையில் தொழக் கூடியவர்களாகவும் பொறுமையை மேற்கொள்பவர்களாகவும் துஆக்கள் செய்யக் கூடியவர்களாகவும் இருப்பவர்களையே அல்லாஹ் பொருட்படுத்துகின்றான். இந்தக் காலத்தில் குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ், ‘உனது பணிவான வழிமுறைகள் அவனுக்கு விருப்பமானதாக இருந்தது’ என்று கூறியுள்ளான். இந்த பணிவான வழிகளே முன்னேற்றத்தின் புதிய வழிகளைத் திறந்து தந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள நாம் அல்லாஹ்வின் அருள்களைப் பெற வேண்டும் என்றால், நாம் அல்லாஹ்வின் உதவியிலிருந்தும் பங்கு பெறுபவர்களாக ஆக வேண்டும் என்றால், நாம் நமது பொறுமையின் கனிகளைச் சுவைக்க வேண்டும் என்றால், நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காட்சியை நாம் பார்க்க வேண்டும் என்றால் பிறகு பணிவை மேற்கொண்டவாறு உறுதியாக நிலைநிற்கும் தன்மையுடன் இறைவன் முன்னால் குனிந்திருப்பதும் அவசியமானதாகும். இந்த விசயம் தான் நம்மை சய்த்தான் மற்றும் தீய சக்திகளின் தாக்குதல்களிலிருந்து நம்மை பாதுகாத்து வைக்கும். மேலும் இந்த விசயம்தான் நமது ஈமானில் வலிமையை ஏற்படுத்தும். இந்த விசயம் தான் நமக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும்.

ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்: பணிவை மேற்கொள்வது எளிதான விசயம் என்று ஒருபோதும் கருத வேண்டாம். பல்வேறு தற்பெருமைகளும், பல பிடிவாதங்களும், பல சோம்பேறித்தனங்களும், உலகப் பேராசைகளும் உலக விசயங்களிலுள்ள ஆர்வங்களும் எப்படிப்பட்டவையாக இருக்கின்றனவென்றால் அவை இந்த உயர் தகுதியை நாம் பெற முடியாமல் ஆக்குகின்றன. அல்லாஹ் கூறுகின்றான்: இது எளிதான பணியல்ல. இது மிகவும் கடினமான சுமையாகும்.

நான் இப்போது கூறிய விசயங்களும் இதை தவிர்த்து இருக்கின்ற வேறு பல விசயங்களும் பணிவை மேற்கொண்டவாறும் அல்லாஹ்வின் அடியானாக இருப்பதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறும் பொறுமையையும் தொழுகையையும் அதற்குரிய சரியான ஆன்மாவுடன் நிறைவேற்றுவதிலிருந்தும் நம்மை தடுக்கின்றது. நாம் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவனது அடியான் எத்தகைய பொறுமையை கடைபிடிக்க வேண்டும் என்றும், அவன் தனது இறை வணக்கத்தின் எத்தகைய உயர்வான தரத்தை அடைய வேண்டும் என்றும் விரும்புகின்றான் என்றால் ஒரு நொடிப்பொழுது கூட அவற்றில் அல்லாஹ் அல்லாதவற்றைப் பற்றிய எண்ணம் வரக்கூடாது. உலகப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது கூட உள்ளம் இறைவன் பக்கம் குனிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவது எளிதல்ல. அது மிகவும் கடினமான சுமையாகும் என்று அல்லாஹ்வே கூறியுள்ளான். இந்த கடினமான சுமையைச் சுமப்பது அல்லாஹ்வின் அருள் இல்லாமல் சாத்தியமற்றதாகும்.

எனவே அவனது அருளை வேண்டுங்கள். அவனது அருளைப் பெறுவதற்கு அவன் முன்னால் குனியுங்கள். அதற்காக முயற்சி செய்யுங்கள். ஆனால் பணிவும், தாழ்மைக் குணமும் இருந்தால் தான் இந்த உதவி கிடைக்கும். மேலும் ***அன்னஹூம் முலாகூ ரப்பிஹிம் அவர்கள் தங்கள் இறைவனை சந்திப்பவர்களாக இருக்கின்றனர்*** என்ற உறுதியில் நிலைத்திருப்பவர்களாக அவர்கள் இருந்தால், பிறகு அவர்கள் பொறுமை மற்றும் துஆவுக்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக இருப்பார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுபவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைத் தங்கள் முன்னால் வைத்திருப்பவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த முன்மாதிரியை தனது சொந்த பலனுக்காக மட்டுமல்லாமல் அந்த முன்மாதிரியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள பேரன்பு, மிகுதியான நேசம் ஆகியவற்றின் காரணமாக அதை பின்பற்றி நடப்பவர்களாக அவர்கள் இருப்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீதுள்ள பேரன்பின் நெருப்பை தமது நெஞ்சங்களில் மூட்டியவாறு அவர்களது ஒவ்வொரு செயலையும் பின்பற்றிச் செல்வதற்கு முயற்சி செய்பவர்களாக அவர்கள் இருப்பார்கள். இத்தகைய உண்மையான நிலைமை தான் ஒரு நம்பிக்கையாளரை உண்மையான நம்பிக்கையாளராக ஆக்குகின்றது. இந்த உண்மையான

நிலைமை தான் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியதன் மூலம் யஹ்பிகுமுல்லாஹ் அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்ற அல்லாஹ்வின் கூற்றுக்கு உண்மையில் பொருந்தக் கூடியவர்களாக நம்மை ஆக்குகின்றது. இந்த விசயம்தான் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பில் நாம் முன்னேறும்படி செய்கின்றது. இதே அன்பு தான் பிறகு *அன்னஹுூம் இலைஹி ராஜிவூன் அவர்கள் அவன் பக்கம் திரும்பிச் செல்லக் கூடியவர்களாக இருக்கின்றனர் (2:47)* என்ற உண்மையான அறிவை நம்மிடம் உருவாக்குகின்றது. இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்கின்ற மனிதன் தான் உண்மையான மனிதனாக இருக்க முடியும். அல்லாஹ்விடம் நாங்கள் ஒரு பொருளே அல்ல. நீ தான் எங்களது துஆக்களை கேட்க வேண்டும். எங்களிடம் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் நீ ஏற்படுத்துவாயாக! இந்த உயர்ந்த தரத்தில் நீ எங்களை கொண்டு சேர்ப்பாயாக! என்று நாம் துஆ செய்யும் போது பொறுமையை மேற்கொள்வதிலும் தொழுகையைப் பேணுவதிலும் நிலைத்திருக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு அல்லாஹ்விடம் நாம் இவ்வாறும் கேட்கின்றோம். இறைவா! இதில் எவ்விதத்திலாவது நமது நஃப்ஸின் கலப்படம் இருந்தால், அதாவது நமது துஆக்களில், நமது முயற்சிகளில், வெளிப்படையாக நாம் காட்டும் பணிவில் நமது நஃப்ஸின் கலப்படம் இருந்தால் நீ எங்களை மன்னிக்க வேண்டும். பணிவு தொடர்பாக நம்மிடமுள்ள உணர்வு நமது நஃப்ஸின் ஏமாற்றுதலாக இருந்து விடக் கூடாது. எனவே உண்மையாகவே பணிவை மேற்கொள்பவர்களில் ஒருவராக நீ எங்களை ஆக்குவாயாக! உனது அன்பான தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ் தனது இந்த அடியாரை அவரது பணிவின் காரணமாக ஏழாவது வானத்திற்கு உயர்த்தி விட்டான் என்று எவர்களைப் பற்றி கூறியுள்ளார்களோ அத்தகைய பணிவும், தாழ்மைக் குணமும் உள்ள அடியார்களில் ஒருவராக நீ எங்களை ஆக்குவாயாக! உனக்குப் பிரியமான தூதர் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் எந்த வழிகளில் நாங்கள் செல்ல வேண்டும் என்று விரும்புகின்றார்களோ அந்த வழிகளில் சென்றவாறு எங்களது வாழ்க்கையை கழிப்பதற்கான நல்வாய்ப்பை நீ எங்களுக்கு வழங்குவாயாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திடம் வைத்திருந்த எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றக் கூடியவர்களாக நீ எங்களை ஆக்குவாயாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை நான் கூறுகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது சிறிய பாவம் அது எவ்வளவுதான் சிறிதாக இருந்தாலும் அது நம்மீது சவாரி செய்ய ஆரம்பித்து விட்டால் அது படிப்படியாக பெரும் பாவங்களின் பக்கம் கொண்டு சென்று விடும். பல்வேறு குறைகள் மனிதனுக்குள்ளேயே எந்த அளவு ஒன்றிப்போய் விடுகின்றதென்றால் அதிலிருந்து இரட்சிப்பு கிடைப்பது கடினமானதாக ஆகி விடுகின்றது. மனிதன் ஒரு பலவீனமான படைப்பினமாக இருக்கின்றான். தமது செயல்களின் விளைவின் காரணமாக அவன் தன்னைத் தானே பெரியவனாக எண்ண ஆரம்பித்து விடுகின்றனர். கர்வமும் அகங்காரமும் அவனிடம் வந்து விடுகின்றது. எதுவரை மனிதன் அல்லாஹ்வின் வழியில் தன்னை எல்லாரையும் விட சிறியவனாக கருதமாட்டானோ அதுவரை அவனுக்கு மீட்பு கிடைக்காது.

எத்தகைய உண்மையான விசயத்தை கபீர் அவர்கள் கூறியுள்ளார்கள்: நாம் சாதாரண சிறிய குடும்பத்தில் பிறந்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். அதனால் குனிந்து நாம் எல்லாருக்கும் ஸலாம் கூறுகின்றோம். பெரிய குடும்பத்தில் பிறந்திருந்தால் நமக்கு இறைவன் கிடைத்திருக்க மாட்டான் என்று கூறுகின்றார்கள். மக்களோ உயர் குடும்பத்தில் பிறந்ததனால் அதில் பெருமை கொள்கின்றனர். ஆனால் கபீர் அவர்களோ தனது சாதாரணமான சிறிய குடும்பத்தைப் பார்த்தவாறு அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் ஒவ்வொரு நொடியும் நான் எந்த அளவு அர்ப்பமானவனாக இருக்கின்றேன். எனக்கு என்ன தகுதி இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அவன் எவ்வளவு தான் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் அவன் தன்னைப் பார்க்கின்ற போது ஏதாவதொரு வகையில் அவனுக்கு கண்கள் இருந்தால் அவன் தன்னை முழு பிரபஞ்சத்துடன் ஒப்பிடும் போது, தான் எவ்வித தகுதியும் இல்லாதவன் என்பதையும் நிச்சயமாக அறிந்து கொள்வான். ஒரு சக்தியற்ற ஏழையான கிழவியுடன் ஒரு மனிதன் ஒரு உயர் குடும்பத்தைச் சேர்ந்த மகத்தான மனிதருடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது போல் நடந்து கொள்ளாத

வரை மேலும் அவ்வாறு நடந்து கொள்வதுடன் எல்லா விதமான கர்வம், அகங்காரம், தற்பெருமை ஆகியவற்றிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில்லையோ அதுவரை ஒருபோதும் அவன் இறைவனின் அரசவைக்குள் நுழைய முடியாது. எந்த அளவு நல்லொழுக்கம் இருக்கின்றதோ அதில் சிறிதளவு குறைவு ஏற்பட்டாலும் அல்லது தேவைக்கு அதிகமாக அது வெளிப்பட்டாலும் அது தீய ஒழுக்கமாக மாறி விடுகின்றது. அல்லாஹ் தனது படைப்பினங்களின் நன்மைக்காக திறந்து வைத்துள்ள கதவு ஒரே கதவு தான். அதாவது அது துஆவாகும். ஒரு நபர் அழுது மன்றாடியவாறு இந்த கதவு வழியாக நுழையும் போது கருணைமிக்க எஜமானன் அவர் மீது தூய்மை மற்றும் பரிசுத்தத்தின் போர்வையைப் போர்த்துகின்றான். தனது மகத்துவத்தை அவர் மீது எந்த அளவு மிகைத்திருக்கும்படி செய்து விடுகின்றான் என்றால் பொருத்தமற்ற தகுதியற்ற செயல்களைச் செய்வதிலிருந்தும் அவர் வெகுதூரம் விலகி ஓடி விடுகின்றான். இறைவனை ஏற்றுக் கொண்ட பிறகும் மனிதன் பாவத்தை விட்டும் விலகாமல் இருப்பதற்குரிய காரணம் என்ன? உண்மையில் நாத்திகத்தின் வேர் இதில் இருக்கின்றது. அவர் இறைவன் மீது முழுமையான நம்பிக்கையும் நிச்சய உறுதியும் கொண்டவராக இல்லை. ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் நம்மை கணக்கெடுக்கக் கூடியவனாக இருக்கின்றான். அவன் ஒரு நொடியில் நம்மை அழித்து விட முடியும் என்பதை அவன் அறிந்திருந்தால் எவ்வாறு அவனால் தீமையைச் செய்ய முடியும்? எனவே தான் ஹதீஸில் ஒரு திருடன் மூஃமினாக இருக்கின்ற நிலையில் திருடுவதில்லை. ஒரு விபச்சாரம் செய்பவன் மூஃமினாக இருக்கின்ற நிலையில் விபச்சாரம் செய்வதில்லை என்று வந்துள்ளது. திருடனும் விபச்சாரம் செய்பவனும் சந்தேகமின்றி ஒரு சமயத்தில் ஈமான் கொண்ட நிலையில் தான் இருந்தனர். பிறகு அவர்களது நிலைமையில் எத்தகைய மாறுதல் ஏற்படுகின்றதென்றால் அவர்கள் தவறான செயல்களைச் செய்வதில் மூழ்கி விடுகின்றனர். இறைவனது கோபம் அழிவை ஏற்படுத்துகின்ற இடியைப் போல் விழும். அது எரிந்து பொசுக்கி விடுகின்ற நெருப்பு போன்று அழித்து விடும் என்ற இறைஞானமும் அகப்பார்வையும் ஒருவரிடம் உருவானால் தான் தீய செயல்களிலிருந்து அவருக்கு இரட்சிப்பு கிடைக்கும். பிறகு இறைவனின் மகத்துவம் அவரது உள்ளத்தில் எப்படி ஆதிக்கம் செலுத்தும் என்றால் அதனால் எல்லா தீய செயல்களும் உள்ளுக்குள்ளேயே உருகி கரைந்து விடுகின்றது.

அதாவது அல்லாஹ்வின் கோபம் நம்மை அழிக்கக்கூடியதாக இருக்கின்றது என்ற இறைஞானமும் அகப்பார்வையும் உருவாக வேண்டும். அதன் விளைவாக அல்லாஹ்வின் மகத்துவம் எந்த அளவு உள்ளத்தில் பதிந்து விடும் என்றால் அது உள்ளத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடும். பிறகு தவறான செயல்கள், தவறான எண்ணங்கள் ஆகியவை அழிந்து விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனைப் பற்றிய அறிவில்தான் இரட்சிப்பு அடங்கி இருக்கின்றது.

இந்த இறைஞானத்தைப் பெற வேண்டும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த இறைவனைப் பற்றிய அறிவின் மூலமாகவே அவன் மீதுள்ள அன்பு வளர்ச்சி அடைகின்றது. எனவே எல்லாவற்றையும் விட முதலாவதாக இறைவனைப் பற்றிய அறிவு இருப்பது அவசியமானதாகும். அன்பை அதிகமாக்குகின்ற இரண்டு விசயங்கள் இருக்கின்றன. ஒன்று, அழகு. மற்றொன்று, அருள்கள் எவருக்கு அல்லாஹ் ஜல்ல ஸானஹுவைப் பற்றிய அழகும் அவனது அருள்களைப் பற்றியும் தெரியாமல் இருக்கின்றதோ அவர் அவன் மீது எப்படி அன்பு கொள்ள முடியும்?

**அதனால் தான் அல்லாஹ் கூறுகின்றான்:**

وَلَا يَدْخُلُوْنَ الْجَنَّةَ حَتّٰى يَلِجَ الْجَمَلُ فِيْ سَمِّ الْخِيَاطِ *ஒட்டகம் ஊசியின் துவாரத்தின் வழியாக நுழையாத வரையில் நிராகரிப்பவர்கள் சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். (7:41)*

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இதற்கு வெளிப்படையான பொருளைக் கொடுக்கின்றனர். ஆனால் நான் இதையே கூறுகின்றேன். அதாவது இரட்சிப்பை வேண்டுபவர்கள் இறைவனின் வழியில் கடிவாளம் இல்லாமல் ஓடுகின்ற நஃப்ஸின் குதிரையை தமது முயற்சிகளின் மூலமாக எந்த அளவு மிருதுவாக ஆக்கிவிட வேண்டுமென்றால் அது ஊசியின் துவாரத்தில் நுழைந்து வெளியில் சென்றுவிட வேண்டும். எதுவரை நஃப்ஸ் உலக இன்பங்களினாலும் மன இச்சைகளின் இன்பங்களினாலும் தடித்து விடுகிறதோ அதுவரை அது சாீஅத்தின்

தூய வழிகளைக் கடந்து சுவர்க்கத்தில் நுழைய முடியாது. உலக இன்பங்களின் மீது மரணத்தை ஏற்படுத்தி விடுங்கள். இறைவன் மீதுள்ள அச்சத்தாலும் பயத்தாலும் மிருதுவாகி விடுங்கள். அப்போது தான் இந்த வழியை நீங்கள் கடந்து செல்ல முடியும். இவ்வாறு கடந்து செல்வதே உங்களை சுவர்க்கத்தை அடையும்படி செய்து விடும். அதுவே மறுமையில் உங்களது இரட்சிப்பிற்கு காரணமாகி விடும்.

ஒட்டுமொத்தமாக ஜமாஅத் என்ற நிலையிலும் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு தனி நபரும் பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தின் எத்தகு உயர் தகுதியைப் பெற வேண்டும் என்றால் அவர்கள் பொறுமையை மேற்கொள்வதும் உண்மையிலேயே பொறுமையை மேற்கொள்வதாக இருக்க வேண்டும். அல்லாஹ் அவ்வாறு செய்வானாக! அவர்களது பொறுமை உண்மையான பொறுமையாக ஆக வேண்டும். அவர்களது இறை வணக்கங்கள் உண்மையான இறைவணக்கங்களாக ஆக வேண்டும். அது இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இந்த பொறுமை மற்றும் துஆக்களின் கனிகள் மறுவுலகில் மட்டுமல்லாமல் இவ்வுலகிலும் எந்த அளவு நமக்கு கிடைக்க வேண்டும் என்றால் இத்தகைய ஒரு ஜமாஅத்தைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பது உலகிற்கு தெரிய வேண்டும். அந்த ஜமாஅத் இறைவனுக்கு முன்னால் பணிவுடன் நிற்கக் கூடியதாகவும் இறைவணக்கங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தக் கூடியதாகவும் அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையின்படியும் மிகுந்த பணிவுடன் செயல்படக்கூடியதாகவும் இருக்கின்றது. அந்த ஜமாஅத் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்யக்கூடிய ஜமாஅத்தாகவும் பொறுமை மற்றும் துஆக்கள் மூலமாக உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக்கூடிய ஜமாஅத்தாகவும் இருக்கின்றது. துன்பங்கள் மற்றும் துயரங்கள் ஏற்படுகின்ற சமயத்தில் உலகவாதிகளின் முன்னால் குனிகின்ற ஜமாஅத்தாக அது இருக்காது. மாறாக அனைத்து ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற அந்த இறைவன் பக்கம் குனிகின்ற ஜமாஅத்தாக அது இருக்கின்றது. எல்லா விதமான வெளிப்படையான பொருள்களும், வெளிப்படையாகத் தெரியும் ஆற்றல்களும் எதிரிகளிடம் இருந்தும் கூட அந்த இறைவன் அவர்களை தனக்குக் கீழ் கொண்டு வருவதற்கான ஆற்றலை உடையவனாக இருக்கின்றான். உலகிற்கு நம்மிடமிருந்து இத்தகைய காட்சி தென்படுகின்றது என்றால் உண்மையான நம்பிக்கையாளர்கள் இவர்கள்தான் என்று நம்மைப் பற்றி உலகம் கூற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விடும். இறைவனுடன் தொடர்புள்ள மக்களைப் பார்க்க வேண்டும் என்றால் இந்த மக்களைப் பாருங்கள். இவர்களில் இறைவன் தென்படுகின்றான். இந்த மக்கள்தான் தங்களது இறைவனின் அன்பைப் பெறுபவர்களாக இருக்கின்றனர். இந்த மக்கள்தான் உலகிற்கு இறைவனை சந்திக்கின்ற வழிகளைக் காட்ட முடியும் என்று உலகம் நம்மைப் பற்றி கூறும் நிலை ஏற்படும். அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரையும் இந்த நிலையைப் பெறக்கூடியவர்களாக ஆக்குவானாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்றே பணிவை கடைபிடித்தவாறு அல்லாஹ்வின் மீதுள்ள அன்பில் மேலும் முன்னேறுபவர்களாக நாம் ஆவோமாக! அதன் மூலம் மறுவுலக இரட்சிப்பையும் பெறக்கூடியவர்களாக நாம் ஆவோமாக!

பாகிஸ்தானில் ஜமாஅத்திற்கு உள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களது துன்பங்களை அகற்றுவானாக! அவர்களது ஈமானை உறுதியாக இருக்கும்படி செய்வானாக! இறைவனுடன் உள்ள தொடர்பில் அல்லாஹ் அவர்களை முன்னேறும்படி செய்வானாக! பாகிஸ்தானில் வசிக்கின்ற அஹ்மதிகளும் தங்களது ஈமானுக்காகவும் நிச்சய உறுதிக்காகவும் குறிப்பாக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் தனது நெருக்கத்தின் தகுதியை ஒவ்வொருவரும் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HAZRATH KHALIFATUL MASIH V
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on 07.06.2013

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456